THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

Tuesday, 29th January 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock. Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—OBITUARY REFERENCE.

MR. SPEAKER : It is my painful duty to inform the House about the death of Sri M. G. Shankar, a sitting member of the Assembly from Nanguneri Constituency on the 25th December 1962.

It is also my painful duty to inform the House about the deaths of Sri K. Varadachari, a member of the former Assembly on 1st January 1963 and of Sri P. Jeevanandam, a member of the former Assembly on 18th January 1963.

On behalf of the House I will convey the condolences to the bereaved families.

I request the hon. Members to stand in silence for a minute as a mark of expressing our sorrow at their death and showing our respect to the departed souls.

The House stood in silence for a minute.

As a mark of respect to the memory of Sri M. G. Shankar, a sitting member of the House, I adjourn the House till 9 a.m.

The House then adjourned and reassembled at 9 a.m.

II.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

வாடகைக்கு டிராக்டர் வழங்குதல்

* **1. கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— 9–00 a.m.

(அ) வட கடலூர் மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் இருந்து, ஒவ்வொரு யூனியனுக்கும், ஒரு டிராக்டர் விதம் வாடகைக்கு விட அரசாங்கம் கொடுக்கும்படி கோரிக்கை வந்ததா ?

[29th January 1963

(இ) ஆம் என்றால், அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. தற்போதைக்கு இந்த கோரிக்கையை நிறைவேற்றுவது சாத்தியமானதல்ல எனக் கருதப்பட்டது. கலெக்டர் அவ்வாறு அறிவிக்கப்பட்டார்.

(*a*) Yes.

(*b*) The representation was examined. It was found that it was not feasible for the Government to comply with the request for the present. The Collector was informed accordingly.

திரு. ஏ. ஆறுமுகம் : மற்ற எந்த எந்த மாநிலத்திலிருந்து இத்தகைய கோரிக்கைகள் வந்திருக்கின்றன ? அவற்றின் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : மற்ற மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பது பற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : சர்க்கார் வசமுள்ள, குறிப்பாக கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள டிராக்டர்கள் ரிபேராகி, அவற்றுக்காகப் பல லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : கோயமுத்தூர் மாவட்டத்தைப் பற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. அதற்குக் கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போடலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : விவசாயிகள், டிராக்டர்களை மிக அவசியமாகக் கருதுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றுக்கும் ஒரு டிராக்டர் வீதம் கொடுக்காவிட்டாலும், தாலுகா ஒன்றுக்கு ஒரு டிராக்டர் வீதமாவது கொடுப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : டிராக்டர்கள், புல் டோஸர்கள் இவைகளெல்லாம் விவசாய இலாகா மூலமாக விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. ஆர்.டி.எல்.ப. இலாகாவின்கிழ் இயங்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு டிராக்டர் வாங்கி வாடகைக்கு விடலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. பின்னர் இதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்படும்.

Dam across Palar (Ramanathapuram district)

* 2 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a dam across the Palar near Singampunari in Thiruppathur taluk in Ramanathapuram district ; and

(*b*) the estimated cost thereof ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) Rs. 1,34,000.